அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை, [தமிழ்நாடு 1956 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச்சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1956) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

127. தமிழ்நாடு 1953 ஆம் ஆண்டு விளம்பர வரி விதிகளை குறைப்பது குறித்து வணிக வரிகள்-சமய அறக் கட்டளைகள் துறையின் 22-11-1983 ஆம் நாளிட்ட 1354 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு விளம்பர வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1983) 7 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

128. பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் 1982-83 ஆம் ஆண்டிற்கான பதினோராவது ஆண்டறிக்கை (தமிழ், ஆங்கிலம்) [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

129. தமிழ்நாடு முதல் அமைச்சர், அமைச்சர்கள், அரசு ஊழியர்கள் ஆகியோர் மீது சாராயம், இந்தியாவில் தயாரிக்கப் படும் அயல்நாட்டு மதுவகைகள் ஆகியவற்றின் உற்பத்தி, மொத்த விநியோகம் சில்லரை விநியோகம் ஆகியவைகளுக்கான உரிமை மற்றும் உரிமம் வழங்குவது மற்றும் இவை தொடர்பான பொருள்கள் சம்பந்தமான சாட்டுரைகளை விசாரிக்க அமைக்கப் பட்ட நீதிபதி திரு டி. இராமபிரசாத்ராவ் விசாரணைக் குழுவின் அறிக்கையின் முடிவுகள் (ஆங்கிலம்.)

130. நீதிபதி திரு டி. இராமபிரசாத்ராவ் விசாரணைக் குழுவின் அறிக்கை ஏற்கப்பட்டது குறித்த 15-3 1984 ஆம் நாளிட்ட மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறையின் 330 ஆம் எண் அரசாணையின் நகல்.

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

53. தமிழ்நாட்டில் தொழிலாளர்கள் நிலைமை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1984-85 (தமிழ், ஆங்கிலம்).

54. வேலை வாய்ப்பு—பயிற்சி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1984-85 (29 ஆம் எண் மானியக் கோரிக்கையின் துணை மானியக் கோரிக்கை). (தமிழ், ஆங்கிலம்).

55. ''தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் பணிகள்'' குறித்த சிறு புத்தகம்.

56. தமிழ்நாட்டில் நகர்ப்புற வளர்ச்சி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1984-85.